செ.வெ.எண் : 01 /ஜூலை நாள் : 01.07.2017

**இராமநாதபுரம் மாவட்டம்**

**நீர்நிலைகளை தூர்வாரி ஆழப்படுத்துவதன் அவசியம் குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தி, தன்னார்வமாக தூர்வாரும் பணிகளில் ஈடுபட ஊக்குவித்திட வேண்டும்**

**மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள், கமுதி ஊராட்சி ஒன்றியத்தில் களஆய்வு செய்து அலுவலர்களுக்கு அறிவுருத்தல்**

இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரம் மாவட்டம், கமுதி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கிராமங்களில் இன்று (24.06.2017) மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சி பணிகளையும், நீர்நிலைகளை சீரமைப்பதற்காக மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளையும் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் மூலம், ஏழை எளிய மக்கள் சொந்தமாக வீடு கட்டிபயன் பெற ஏதுவாக பசுமை வீடுகள் வழங்கும் திட்டம், பிரதம மந்திரி வீடுகள் வழங்கும் திட்டம் ஆகிய திட்டங்களின் கீழ் ரூ.1.70 இலட்சம் வழங்கப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின் கீழ் கமுதி ஊராட்சி ஒன்றியம், வங்காருபுரம் ஊராட்சியிலுள்ள அலங்காரபட்டிணம், விரதக்குளம் ஆகிய கிராமங்களில் 4 பயனாளிகள் அரசு வழங்கும் நிதியுதவி தலா ரூ.1.70 இலட்சத்தில் கட்டி வரும் புதிய வீடுகளின் கட்டுமானப் பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பார்வையிட்டார்.

மேலும் தற்போது தமிழ்நாடு அரசு, தமிழகத்திலுள்ள அனைத்து நீர் நிலைகளையும் தூர்வாரி ஆழப்படுத்திட நடவடிக்கை மேற்கொள்ள உத்தரவிட்டுள்ளது. அதனடிப்படையில் இராமநாதபுரம் மாவட்ட நிர்வாகத்தின் மூலம் மாவட்டத்திலுள்ள நீர்நிலைகளில் பொது மக்களின் பங்களிப்புடனும், பல்வேறு அரசுத் துறைகளின் மூலமாகவும் நீர்நிலை சீரமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதனடிப்படையில் கமுதி ஊராட்சி ஒன்றியம், அச்சங்குளம் ஊராட்சி, காடநகரி கிராமத்தில் உள்ள கண்மாயில் பொதுப்பணித்துறையின் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ள சீரமைப்பு பணிகளையும், பசும்பொன் கிராமத்தில் உள்ள கண்மாயில் பொதுமக்கள் பங்களிப்புடன் கண்மாயினை ஆழப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகளையும், பச்சேரி கிராமத்தில் உள்ள ஊரணியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் ஊரணியினை ஆழப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளையும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் ஆய்வு செய்தார். மேலும், நீர்நிலைகளை தூர்வாரி ஆழப்படுத்துவதன் அவசியம் குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தி, தன்னார்வத்துடன் இப்பணிகளில் ஈடுபட ஊக்குவித்திட வேண்டும் என அலுவலர்களுக்கு அறிவுருத்தினார்.

அதனைத் தொடர்ந்து, அச்சங்குளம் ஊராட்சி, பொட்டகுளம் கிராமத்தில் ஒருங்கிணைந்த கல்வி மேம்பாடு திட்டத்தின் கீழ் ரூ.11.80 இலட்சம் மதிப்பில் புதிதாக கட்டப்பட்டுள்ள ஊராட்சி தொடக்கப் பள்ளி வகுப்பறை கட்டிடத்தின் கட்டுமான பணிகளின் தரத்தினையும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் நேரில் செய்தார். கட்டுமானப் பணிகள் முழுமையாக நிறைவேற்றப்பட்டுள்ளதைத் தொடர்ந்து, காலதாமதமின்றி பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

இந்த ஆய்வின்போது ஊரக வளர்ச்சி முகமை உதவி செயற்பொறியாளர் திரு.இ.மாரியப்பன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு.கே.ரவி, வி.எஸ்.வெங்கடேஸ்வரன், உதவி பொறியாளர்கள் திரு.செந்தில்குமார், திரு.சீனிவாசன், திரு.வீரசேகர் உட்பட அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**